

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (12.7.2024) அவரது இல்லத்தில், சென்னை கிழக்கு மாவட்டம் – அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்ட பகுதிப் பிரதிநிதி கணபதியின் மகள் பவித்ரா – அஜித்குமார் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (12.7.2024) அவரது இல்லத்தில், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி – அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது பேரன் டாக்டர் எஸ்.நாச்சியப்பன் ரகுபதி – டாக்டர் பி.அழகம்மை ஆகிய புதுமண இணையருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



"மக்களுடன் முதல்வர் திட்டத்தினை ஊரகப் பகுதிகளுக்கு தருமபுரி மாவட்டத்திலிருந்து தொடங்கி வைக்க வருகைபுரிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சேலம் மாவட்டம், காமலாபுரம் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (11.07.2024) வரவேற்றார். உடன், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2024) தருமபுரி, பாளையம் புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு காப்பீட்டிற்கான அட்டைகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் த. மோகன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி. சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.07.2024) அமெரிக்காவில் 2024 நவம்பரில் நடைபெற உள்ள உலக கேரம் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் பங்கேற்கவுள்ள மூன்று கேரம் விளையாட்டு வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர் ஆகியோருக்கு செலவீனத் தொகையாக தலா ரூ. 1.50 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 12ஆம் தேதியிலிருந்து 20 நாட்களுக்கு

# தமிழ்நாட்டிற்கு கர்நாடகா தண்ணீர் வழங்க வேண்டும்!

## காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவு!

சென்னை, ஜூலை 13-

தமிழகத்திற்கு இன்று முதல் வரும் 31 ஆம் தேதி வரை தினமும் 1 டிஎம்சி தண்ணீர் திறந்து விட கர்நாடகாவுக்கு காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டுள்ளது.

காவிரி நீரை பெறுவதற்கு தமிழ்நாடு தொடர்ந்து கர்நாடக மாநிலத்திடம் போராடி வருகிறது. கடந்த ஆகஸ்ட் மாதம் விநாடிக்கு 25,000 கன அடி நீர் திறந்து விட வேண்டும் என்று தமிழ்நாடு வலியுறுத்தியிருந்தது. இதனை கர்நாடகா ஏற்கவில்லை. எனவே உச்சநீதிமன்றத்தை தமிழக அரசு நாடியது. அதேபோல கர்நாடக அரசும் நீதிமன்ற த்தை நாட காவிரி மேலாண்மை ஆணையம் இந்த விவகாரம் குறித்து முடிவெடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின்படி, தமிழகத்துக்கு 2023 ஜூன் மாதத்தில் இருந்து 2024 ஏப்ரல் 28ம் தேதி வரை கர்நாடக அரசு 174.497 டிஎம்சி நீர் திறந்து விட்டிருக்க வேண்டும். ஆனால்,78.728 டிஎம்சி மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. இன்னும் 95.770 டிஎம்சி நீர் நிலுவையில் உள்ளது. இது தவிர, பிப்ரவரி முதல் ஏப்ரல் 28 வரை பிலிகுண்டுலுவில் 7.333 டிஎம்சி நீரை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக கர்நாடகா திறந்து விட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை 2.016 டிஎம்சி மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. இதில், 5.317 டிஎம்சி நீர் நிலுவையில் உள்ளது.

தற்போது மேட்டூர் அணையில் 12.95 டிஎம்சி நீர் இருப்பில் உள்ளது. குடிநீர் தேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக தினமும் 1,200 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், இது 1000 கன அடியாக குறைக்கப் பட்டிருக்கிறது. கர்நாடகாவில் உள்ள 4 அணைகளின் நீர் இருப்பை கணக்கிட்டு, தமிழகத்துக்கு மே மாதத்தில் வழங்க வேண்டிய 2.5 டிஎம்சி நீரை திறக்க உத்தரவிட வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான 2.5 டிஎம்சி நீரையும் கர்நாடகா திறந்துவிட வேண்டும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரி வருகிறது.

இதற்கு கர்நாடக அரசின் தரப்பில் கூறியதாவது: கர்நாடகாவில் கடும் வறட்சி நிலவுகிறது. பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை மழை இல்லை. தற்போது கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய 4 அணைகளிலும் மிக குறைந்த அளவிலேயே நீர் உள்ளது என்றும் இதை கொண்டே பெங்களூரு, மைசூருவின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இப்படி இருக்கையில் தமிழகத்துக்கு நீரை திறந்துவிட்டால் கர்நாடகாவில் குடிநீர் பஞ்சம் ஏற்படும். தற்போதைய சூழலில் தமிழகத்துக்கு நீர் திறக்க இயலாது என கர்நாடகா போதுமான நீரை திறக்க மறுத்து வருகிறது.

இந்நிலையில் நேற்று காவிரி நீர் ஒழுங்காற்றுக்குழுவின் 99வது கூட்டம் நேற்று காணொலி வாயிலாக நடைபெற்றது. இதில், "கடந்த ஆண்டை ஒப்பிடும் போது இந்த ஆண்டு கர்நாடகா உரிய நீரை திறக்கவில்லை. பிப்ரவரி முதல் மே வரையிலான நீரை உரிய முறையில் திறக்கவில்லை. அத்துடன், இந்த ஆண்டு கர்நாடகாவில் வழக்கமான மழைப் பொழிவு பதிவாகியுள்ளது. ஆனாலும், தண்ணீர் திறக்காமல் இருப்பது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறும் செயல். ஆகவே, தண்ணீரை திறக்க உத்தரவிடுங்கள்" என வலியுறுத்தப்பட்டது.

ஆனால், கர்நாடகாவில் மழை இல்லை என்கிற பழைய பல்லவியையே திரும்ப திரும்ப பாடி வருகிறது. இது தரப்பு வாதங்களை கேட்ட ஒழுங்காற்றுக்குழு, தமிழ்நாட்டிற்கு இன்று முதல் வரும் 31ஆம் தேதி வரை நாள் தோறும் 1 டிஎம்சி தண்ணீர் திறந்து விட வேண்டும் என கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையத்திற்கு பரிந்துரைத்துள்ளது.

அதேபோல தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு செல்லும் நீரின் அளவு 1 டிஎம்சியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### பிரதமரின் சொந்த மாநிலத்திலேயே தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டம்!

# குஜராத்தில் தனியார் நிறுவன வேலைக்கான நேர்காணலில் தள்ளுமுள்ளு!

## ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டனர்!

காந்திநகர், ஜூலை 13-

பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில் தனியார் நிறுவன வேலைக்கான நேர்காணலுக்கு ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பா.ஜ.க. ஆளும் குஜராத் மாநிலத்தின் அங்கலேஷ்வரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று, குறைந்த அளவிலான காலிப்பணியிடங்களை நிரப்ப நேர்காணலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இதனையறிந்த இளைஞர்கள் ஆயிரக்கணக்கானோர் நேர்காணல் நடைபெற்ற ஹோட்டல் முன் திரண்டனர். அடித்துப் பிடித்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் ஹோட்டலுக்குள் உள்ளே நுழைய முற்பட்டதால், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. ஹோட்டலின் வாயிலில் தடுப்புக்காக அமைக்கப்பட்டிருந்த கம்பி, பாரம் தாங்காமல் உடைந்ததால், இளைஞர்கள் கீழே விழுந்து படுகாயமடைந்தனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

வளர்ச்சிக்கான மாநில மாடலாக குஜராத் அடையாளப்படுத்தி வரும் சூழலில், சில காலிப்பணியிடங்களுக்காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் குவிந்தது அங்கு தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளது. மோடியின் சொந்த மாநிலத்திலேயே வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடுவதாக விமர்சிக்கும் அரசியல் விமர்சகர்கள், இதன் மூலம் குஜராத் பா.ஜ.க. அரசின் பொய் முகம் தோலுரிக்கப் பட்டிருப்பதாகவும் சாடினர்.

**ராகுல்காந்தி விமர்சனம்!**

இதனிடையே இது தொடர்பான வீடியோவை டேக் செய்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவில் 'வேலையின்மை நோய்' ஒரு தொற்றுநோயாக உருவெடுத்துள்ளதாகவும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் இந்த நோயின் 'மையமாக' மாறியுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். சாதாரண வேலைக்காக இந்தியாவின் எதிர்காலமாக கருதப்படும் இளைஞர்கள் வரிசையில் நிற்பது, பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்காலத்தின் உண்மை முகம் என விமர்சித்துள்ளார்.

**வேலையில்லாத் திண்டாட்டம்!**

தனியார் ஹோட்டல்களில் வேலைக்காக இளைஞர்களின் இந்த அவசரம், குஜராத்தில் பணக்காரர்கள் மட்டுமே பலன் அடைந்துள்ளனர் என்பதற்கு தெளிவான சான்று என காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இணையதளபதிவில், குஜராத்தில் 30 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சியில் இருந்தாலும், மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருப்பதை வீடியோ தெள்ள தெளிவாக காட்டுவதாகவும் விமர்சித்துள்ளார்.



சேலம், அணைமேடு பகுதியில் ரூ. 92.40 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்தினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நேற்று முன்தினம் (11.07.2024) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்ய நீலம், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம் கூடன்குளம் அனுசங்கமம் மஹாலில் அரசுத் துறைகளின் சேவைகளை மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்று வழங்கும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் 2 ம் கட்டமாக ஊரகப் பகுதிகளான முகாம் துவக்க விழா நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், ராபர்ட் புரூஸ் எம்.பி. மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளை வழங்கினார். உடன் ஜோசப்பெல்சி, ஜான்சி ரூபா, பாஸ்கர் உள்பட பலர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள ஜூனியர் காமன்வெல்த் வாள்வீச்சு போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜாய்ஸ் அஷிதா, இந்தியா சார்பில் பங்கேற்கவுள்ளார். ஜாய்ஸ் அஷிதாவின் விமான பயணச் செலவு – தங்குமிடம் – உணவு – போட்டிக்கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்காக ரூ.2 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து அவருடைய தாயாரிடம் வழங்கினார். இப்போட்டியில் வெற்றி வாகைசூடி, தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமைத் தேடித்தருவதோடு, தன்னைப் போன்ற இளம் வீரர்களுக்கு தங்கை அஷிதா முன்மாதிரியாக திகழட்டும் என அறிவுறுத்தினார்.